மாநிலம் தனது குடிமகனை கொலை செய்திருக்கிறது

கோயில் காவலாளி கொலை வழக்கில் உயர்நீதிமன்றம்; தமிழக அரசுக்கு சரமாரி கேள்வி

மதுரை, ஜூலை 1: சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அருகே மடப்புரம் காளியம்மன் கோயில் காவலாளி போலீஸாரால் தாக்கப்பட்டதில் கொலையுண்ட விவகாரம் தொடர்பாக, தமிழக அரசிடம் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதிகள் சரமாரியாக கேள்வி எழுப்பினர்.

'ஒரு மாநிலம் தனது குடிமகனை கொலை செய்திருக்கிறது' எனவும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயிலுக்கு வந்த பெண் பக்தரின் நகைகள் காணாமல்போனது தொடர்பாக, அந்தக் கோயிலின் காவலாளி அஜித்குமாரை போலீஸார் விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். காவல் துறையினர் விசாரணையின் போது நடத்திய தாக்குதலில் அஜித்குமார் கடந்த சனிக்கிழமை கொல்லப்பட்டார்.

இந்நிலையில், அஜித்குமார் மரணம் குறித்த விவகாரத்தை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு ஏற்க வேண்டும் என அதிமுக வழக்குரைஞர் பிரிவைச் சேர்ந்த வழக்குரைஞர்கள் ராஜராஜன், மாரீஸ்குமார், அருண் சுவாமிநாதன் ஆகியோர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியன், ஏ.டி. மரிய கிளாட் ஆகியோர் அமர்வு முன் திங்கள்கிழமை முறையீடு செய்தனர். மனுவாக தாக்கல் செய்யும்பட்சத்தில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுக்கப்படும் என நீதிபதிகள் தெரிவித்தனர்.

இந்த வழக்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியன், ஏ.டி. மரிய கிளாட் அமர்வு முன் செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, வழக்குரைஞர் ஹென்றி திபேன் தன்னையும் இந்த வழக்கில் இணைத்துக் கொள்ள வேண்டும் என மனு தாக்கல் செய்தார்.

இந்த மனுக்கள் விசாரணையின் போது முன்னிலையான வழக்குரைஞர்கள், காவலாளி அஜித்குமாரை தனிப்படை போலீஸார் தடிமனான நெகிழிக் குழாய்கள், இரும்புக் கம்பிகளால் தாக்கினர் எனத் தெரிவித்து, புகைப்படங்களையும், விடியோவையும் தாக்கல் செய்தனர்.

பின்னர், வழக்குரைஞர்கள் முன்வைத்த வாதம்: காவலாளியைத் தாக்கிய போது, சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருப்புவனம் காவல் நிலையத்தில் இருந்தார். காயமடைந்த அஜித்குமாரை சிகிச்சைக்காக திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது, அங்கு உயிரிழந்தார். இந்த நிலையில், விசாரணையை அங்கிருந்து தான் தொடங்கி இருக்க வேண்டும். அவரது உடல் மதுரைக்கு கொண்டு வரப்பட்டது ஏன்? இது சந்தேகத்தை எழுப்புகிறது.

அதுமட்டுமன்றி, அஜித்குமார் தாய் கேட்ட போது, அவரது மகன் இறந்துவிட்டார் என சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்தான் தெரிவித்தார். விசாரணையின்போது, அஜித்குமார் தப்பியோட முயற்சித்தார் என உண்மைக்குப் புறம்பாகத் தெரிவிக்கின்றனர்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், நகைகள் காணாமல் போனது தொடர்பாக எப்போது வழக்குப் பதிவு செய்யப்பட்டது எனக் கேள்வி எழுப்பினர். இதற்கு, அரசுத் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர் 28.6.25-இல் வழக்குப் பதிவு செய்யப்பட்டது என்றார்.

தொடர்ந்து, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர்கள் முன்வைத்த வாதம்: புகார்தாரரான நிக்கிதா ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியின் நெருங்கிய உறவினர். இதனால்தான் வழக்குப் பதிவு செய்யாமல் தாக்கினர். காவல் துறைக்கு அழுத்தம் அளித்த அந்த ஐஏஎஸ் அதிகாரி யார் எனக் கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: இந்த வழக்கை தனிப்படை விசாரணைக்கு மாற்றியது யார்?. அவர்கள் யார் உத்தரவின்பேரில் விசாரணை நடத்தினர். சமூக வலைதளங்களில் வரும் தகவலின் அடிப்படையில் தனிப்படை போலீஸார் விசாரணை மேற்கொள்ள இயலுமா?. உயரதிகாரிகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் முழுமையான விவரங்கள் மறைக்கப்படுகின்றன.

நகைத் திருட்டு வழக்கில் ஒரு நபரை விசாரணை என்ற பெயரில் அடித்துக் கொலை செய்திருக்கின்றனர். காவல் துறையின் பணி புலனாய்வு செய்வது மட்டுமே. காவல் நிலையத்தில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் முழுமையாக செயல்படவில்லை. மக்களுக்காக அரசு பணியாற்ற வேண்டும். யார் உத்தரவின் பேரில், தனிப்படை குழுவினர் விசாரணை செய்தனர் என்பது குறித்து தமிழக காவல் துறை தலைமை இயக்குநர் (டிஜிபி) பதிலளிக்க வேண்டும்.

சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஏன் காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டார்?. அவரைப் பணிநீக்கம் செய்திருக்க வேண்டும். காவல் நிலையங்களைத் தவிர்த்து, பிற இடங்களுக்கு விசாரணைக்கு அழைத்துச் சென்றது ஏன்?. அஜித்குமார் மரணத்துக்கு அரசே பொறுப்பேற்க வேண்டும். ஒட்டுமொத்த காவல் துறையையும் குறை சொல்லவில்லை. இருப்பினும், தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வழக்கு தொடர்பாக திருப்புவனம் நீதித் துறை நடுவர், மதுரை அரசு மருத்துவக் கல்லூரி முதன்மையர், கோயில் இணை ஆணையர், தாக்கப்பட்டபோது விடியோ எடுத்தவர் ஆகியோர் பிற்பகல் 3 மணிக்கு முன்னிலையாகி விளக்கம் அளிக்க வேண்டும் என உத்தரவிட்டனர்.

இதைத் தொடர்ந்து, இந்த வழக்கு பிற்பகல் மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, திருப்புவனம் நீதித் துறை நடுவர் ஆர். வெங்கடேஷ் பிரசாத் விசாரணை அறிக்கையையும், மதுரை அரசு மருத்துவக் கல்லூரி முதன்மையர் அருள் சுந்தரேஷ் குமார் உடல்கூறாய்வு அறிக்கையையும் தாக்கல் செய்தனர்.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் சரமாரி கேள்வி: கோயில் காவலாளி அஜித்குமார் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவரது உடலில் 44 காயங்கள் உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உடலில் எந்த உறுப்பையும் காவலர்கள் விட்டு வைக்கவில்லை. பதவி ஆணவத்தால் அஜித்குமாரை காவலர்கள் தாக்கினர். அவர் உயிரிழக்கும் வரை முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) பதியப்படவில்லை. அப்படி இருக்கும்போது, தனிப்படை குழுவினர் இதை எப்படி விசாரணைக்கு எடுத்தனர்?. காவலர்கள் கூட்டாகச் சேர்ந்து இந்தச் சம்பவத்தை அரங்கேற்றியது தெரியவருகிறது.

ஒரு மாநிலம் (தமிழகம்) தனது குடிமகனை கொலை செய்திருக்கிறது. வழக்கின் சாட்சியங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளன. அஜித்குமாரின் பிறப்புறுப்பு, வாய், காதுகளில் மிளகாய்ப் பொடி தூவப்பட்டிருக்கிறது. அஜித்குமார் தாக்கப்பட்ட இடத்தில் ரத்தக் கறையை ஏன் சேகரிக்கவில்லை என நீதிபதிகள் சரமாரி கேள்வி எழுப்பினர்.

இதையடுத்து, இந்தத் தாக்குதலை விடியோ எடுத்தவர் முன்னிலையாகி தெரிவித்ததாவது: மடப்புரம் பத்ரகாளியம்மன் கோயில் பின்புறம் உள்ள கழிப்பறையிலிருந்து விடியோ எடுத்தேன். சிறிது நேரம் தான் எடுத்தேன். அச்சமாக இருந்ததால் வெளியே வந்துவிட்டேன் என்றார்.

அப்போது, அரசுத் தரப்பில் முன்னிலையான வழக்குரைஞர், இந்த மனுக்கள் தேவையற்றவை. எதிர்த் தரப்பு இதை அரசியலாக்க நினைக்கின்றனர். அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும். சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதையடுத்து, நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு: காவல் நிலையத்தில் விசாரணை நடைபெறவில்லை. வரும் காலங்களில் இது போன்ற செயல்களில் போலீஸார் ஈடுபடக் கூடாது. கல்வி அறிவு அதிகம் உள்ள மாநிலத்தில் இது போன்ற நிகழ்வு ஆபத்தானது.

அஜித்குமாரின் தாய் அளித்த புகாரின்பேரில், இதுவரை வழக்குப் பதியவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 50 லட்சம் வழங்குவதாகவும், குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை அளிப்பதாகவும் சிலர் உறுதி அளித்தனர். அரசு இந்த வழக்கை உணர்வுபூர்வமாகப் பார்க்க வேண்டும்.

சட்டவிரோத மரணத்துக்குக் காரணமான உயரதிகாரிகள் உள்பட அனைவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். காவல் நிலையம், கோயில் என வழக்கு சம்பந்தப்பட்ட இடங்களில் உள்ள அனைத்து சிசிடிவி காட்சிகளையும் பாதுகாக்க வேண்டும்.

மதுரை மாவட்ட நீதிபதி ஜான் சுந்தர்லால் சுரேஷ் இந்த விவகாரம் தொடர்பாக முழு விசாரணையைத் தொடங்க வேண்டும். அரசுத் தரப்பில் இந்த வழக்கு தொடர்பான உயரதிகாரிகள் உள்பட அனைவர் மீதும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், திருப்புவனம் காவல் ஆய்வாளர், சிவகங்கை மாவட்ட எஸ்.பி., விசாரணை அதிகாரி ஆகியோர் வழக்கு தொடர்பான அனைத்து ஆவணங்களையும் விசாரணை நீதிபதியிடம் புதன்கிழமை (ஜூலை 2) வழங்க வேண்டும்.

இந்த வழக்கு விசாரணை வருகிற 8-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது என்றனர் நீதிபதிகள்.

உடனடியாக அரசு நடவடிக்கை

சென்னை, ஜூலை 1: மடப்புரம் காவலாளி கொலை வழக்கில் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளதாக முதல்வரும் திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களுக்கு அவர் செவ்வாய்க்கிழமை பேட்டியளிக்கும்போது, இதுதொடர்பான கேள்வி எழுப்பப்பட்டது.

மடப்புரம் காவலாளி மரண வழக்கில் 2 நாள்கள் கழித்துதான் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டிருந்தால் பிரச்னை இல்லாமல் இருந்திருக்குமே என கேட்கப்பட்டது. அதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அளித்த பதில்:

தகவல் தெரிந்தவுடன் நடவடிக்கை எடுத்துவிட்டோம். கைது செய்துவிட்டோம். இப்போதுகூட உயர் அதிகாரி மீது நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று தெரிவித்தார்.

திமுக ஆட்சியில் இது முதல் முறையல்ல

சென்னை, ஜூலை 1: திருப்புவனம் போன்ற சம்பவம் திமுக ஆட்சியில் முதல் முறை அல்ல என்று எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலருமான எடப்பாடி கே.பழனிசாமி விமர்சித்துள்ளார்.

திருப்புவனம் சம்பவத்தில் இறந்த அஜித்குமாரின் குடும்பத்தினருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாடியது குறித்து எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட பதிவு:

முதல்வர் மு.க.ஸ்டாலின் தொலைபேசி உரையாடல் அலட்சியத்தின் உச்சம். இந்தக் கொலைக்கு காரணமானது திமுக அரசு.

இதற்கு 'சாரி' என்பதுதான் பதிலா? அஜித்குமார் இருந்ததால் தான் அந்தக் குடும்பம் தைரியமாக இருந்தது. அவர்களின் தைரியத்தைக் கொலை செய்துவிட்டு, 'தைரியமாக இருங்கள்' என்று சொல்வது முறையா?

முதல்வரின் பேச்சில் கொஞ்சம்கூட குற்ற உணர்ச்சியே இல்லையே? அஜித்குமார் இறந்து 4 நாள்கள் கழித்து, எதிர்க்கட்சியான அதிமுக சார்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அதன் அடிப்படையில் நீதிமன்றம் விசாரித்து, கடுமையான விமர்சனங்களை வைத்த பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து கைது நடக்கிறது. இது என்ன திமுக ஆட்சியில் முதல் முறையாகவா நடந்திருக்கிறது? இது 25-ஆவது முறை என்று பதிவிட்டுள்ளார்.

அன்புமணி ராமதாஸ் (பாமக): அஜித்குமாரின் முழுமையான உடற்கூறு ஆய்வறிக்கை வெளியாகும்போது இன்னும் அதிர்ச்சியான செய்திகள் வெளியாகக்கூடும். ஆனால், இவை அனைத்தையும் மூடி மறைக்க காவல் துறை துடிக்கிறது.

இந்த வழக்கில் காவலர்கள் 5 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ள நிலையில், இதில் தொடர்புடைய உயரதிகாரிகளும் கைது செய்யப்பட வேண்டும். வழக்கின் விசாரணை முடிவடைந்து தீர்ப்பு வழங்கப்படும் வரை அவர்களுக்கு பிணை வழங்கப்படாமல் இருப்பது உறுதி செய்ய வேண்டும்.

தேசிய மனித உரிமை ஆணையத்தில் பாஜக புகார்

சென்னை, ஜூலை 1: காவல் துறை விசாரணையின்போது, கோயில் காவலாளி உயிரிழந்த சம்பவம் தொடர்பாக தேசிய மனித உரிமை ஆணையத்தில் தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் புகார் அளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் செவ்வாய்க்கிழமை அளித்த புகார் மனு:

சிவங்கை மாவட்டம் மடப்புரம் கோயில் காவலாளியாகப் பணியாற்றிய அஜித்குமார் காவல் துறை விசாரணையின்போது இறந்ததாகவும், அவரது உடலில் பல்வேறு இடங்களில் காயங்கள் இருந்ததாகவும் முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அஜித்குமார் மரணம் தொடர்பாக உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். மேலும், ஏற்கெனவே காவல் துறை விசாரணையின்போது நடந்த இறப்பு சம்பவங்கள் குறித்து மாநில அரசிடம் உரிய அறிக்கையை பெற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். அஜித்குமாரின் குடும்பத்துக்கு உரிய நீதியும், இழப்பீடும் கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நயினார் நாகேந்திரன் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

தனிப்படை போலீஸாரின் குடும்பத்தினர் போராட்டம்

மானாமதுரை, ஜூலை 1: சிவகங்கை மாவட்டம், மடப்புரம் பத்திரகாளியம்மன் கோயில் காவலாளி போலீஸாரால் தாக்கப்பட்டு கொலையுண்ட விவகாரம் தொடர்பாக கைது செய்யப்பட்ட தனிப்படை போலீஸாரின் குடும்பத்தினர் திருப்புவனம் காவல் நிலையத்தை செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

திருட்டு தொடர்பாக விசாரணைக்கு அழைத்துச் சென்ற மடப்புரம் பத்திரகாளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமாரை அடித்துக் கொலை செய்ததாக தனிப்படை போலீஸார் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட போலீஸாரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள், ஆண்கள், உறவினர்கள் தங்களது குழந்தைகளுடன் திருப்புவனம் காவல் நிலையத்தை செவ்வாய்க்கிழமை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

அப்போது அவர்கள் கூறியதாவது:

காவல் துறை அதிகாரிகள் உத்தரவிட்டதால்தான் தனிப்படை போலீஸார் அஜித்குமாரைத் தாக்கினர். இதற்கு முக்கியக் காரணம் காவல் துறை உயர் அதிகாரிகள்தான். எனவே, அவர்களையும் கைது செய்ய வேண்டும். தனிப்படை போலீஸாரை விடுவிக்க வேண்டும் என்றனர்.

அங்கிருந்த டி.எஸ்.பி. சண்முகசுந்தரம் உள்ளிட்ட போலீஸார் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தியதையடுத்து, அவர்கள் கலைந்து சென்றனர்.

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
ந.க.எண். இ2/2346/2025 ஒப்பந்தப்புள்ளி நாள் : 27-06-2025.

உதகமண்டலம் நகராட்சியில் கலைஞர் நகர்புற திட்டம் 2025-2026 (KNMT) திட்ட நிதியின் கீழ், கீழ்கண்ட பணிக்கு தகுதி வாய்ந்த பதிவு பெற்ற நகராட்சி ஒப்பந்ததாரர்களிடம் இருந்து, மூடி அரக்கு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 14-07-2025 ஆம் தேதி மாலை 3.00 மணி வரை நகராட்சி ஆணையாளர் அவர்களால் வரவேற்கப்படுகிறது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்று மாலை 3.30 மணிக்கு மேலாக பிரித்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் நகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் திறக்கப்படும்.

வ. எண்.	பணியின் விபரம்	பணியின் தோராய மதிப்பீடு ரூ. இடைசாம்	முன் வைப்பு தொகை ரூ.	ஒப்பந்தப்புள்ளி படிவ விலை ரூ.			வேலை முடிக்க வேண்டிய காலம்
				விலை ரூ.	GST (18%) ரூ.	மொத்தம் ரூ.	
1	உதகமண்டலம் நகராட்சிக்குட் பட்ட காந்தல், பகுதியில் வணிக வளாகம் மேம்படுத்தும் பணி.	393.00	393000	15000	2700	17700	12 மாதம்

மேற்கண்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை 13-07-2025 ஆம் தேதி மாலை 3.30 மணி வரை அதற்கான தொகையினை நகராட்சி கருவூலத்தில் செலுத்தி நகராட்சி தலைவர் மையத்தில் விண்ணப்பித்து பெற்று கொள்ளலாம். மேற்படி வேலைகளுக்கான முன்வைப்பு தொகை நகராட்சி கருவூலத்தில் பணமாக செலுத்தி அதற்கான அசல் சான்றினை ஒப்பந்தப்புள்ளிகளுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். முன்வைப்பு தொகை செலுத்தாமல் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுகொள்ளப்படமாட்டாது. மேலும் பணிகள் குறித்த இதர விபரங்களை அலுவலக நாட்கள், நேரத்தில் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்

ஆணையாளர்,
உதகமண்டலம் நகராட்சி.
செ.ம.தொ.இ/3345/ஒப்பந்தப்புள்ளி/2025

அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில்
மாடம்பாக்கம், சென்னை–126.
மறு டெண்டர் / மறு பொது ஏலம் அறிப்பு

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் வட்டம், மாடம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலில் வரும் 10.07.2025 வியாழக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணிக்கு பசலி 1435 க்கு (11.07.2025 முதல் 30.06.2026 முடிய) உள்ள காலத்திற்கு மட்டும் கீழ்க்கண்ட விவரப்படி மறு டெண்டர் / மறு பொது ஏலம் திருக்கோயில் அலுவலகத்தில் செங்கல்பட்டு, இந்து சமய அறநிலையத்துறை, உதவி ஆணையர், அறங்காவலர்கள் மற்றும் தாம்பரம் சரக ஆய்வர் ஆகியோர் முன்னிலையில் பகிரங்கமாக மறு டெண்டர் / பொது ஏலம் விடப்படும். கீழ்கண்ட இனத்திற்கான டெண்டர் 10.07.2025 வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குள் திருக்கோயில் அலுவலகத்தில் உள்ள டெண்டர் பெட்டியில் சேர்க்கப்பட வேண்டும். கீழ்கண்ட இனத்திற்கு ஏலம் நடத்திய பிறகு டெண்டர் திறக்கப்படும்.

மறு டெண்டர் / மறு ஏலம் இனங்கள் அறிப்பு

வ.எண்	டெண்டர் / ஏலம்	டெண்டர் / ஏலம் டெபாசிட் தொகை	டெண்டர் /ஏலம் காலம்
1	அர்ச்சனை பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம்	ரூ. 3,00,000/-	பசலி 1435–க்கு (11.07.2025 முதல் 30.06.2026 வரை)
2	பிரசாத விற்பனை உரிமம்	ரூ. 5,00,000/-	பசலி 1435–க்கு (11.07.2025 முதல் 30.06.2026 வரை)
3	நெய் தீபம் மற்றும் எள் தீபம் விற்பனை செய்யும் உரிமம்	ரூ. 1,00,000/-	பசலி 1435–க்கு (11.07.2025 முதல் 30.06.2026 வரை)

மறு டெண்டர் / மறு பொது ஏலம் எடுத்தவர்கள் டெண்டர் / பொது ஏலம் தொகை GST 18% முழுவதையும் ஏல நாளன்று அப்போதே செலுத்திட வேண்டும். டெபாசிட் தொகை தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வரைவோலை மூலம் எடுத்திட வேண்டும். மறு டெண்டர் / மறு பொது ஏலம் நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டுத்தெரிந்துக் கொள்ளலாம்.

N.S.முரளிதரன் அறங்காவலர் குழு தலைவர் | இடம்: மாடம்பாக்கம் / நாள் : 01.07.2025 செ.ம.தொ.இ / 3349 / ஒப்பந்தப்புள்ளி / 2025 | க. விஜயன் செயல் அலுவலர்

equitas Small Finance Bank
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(முன்னர் எக்விடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002, போன் : 044-42995000, 044-42995050

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்கானது விதி 8 (1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்தமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன் தாரர்களுக்கும் / பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி சட்டம் 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு கீழே குறிக்கப்பட்டவாறு தொகைகளுடன் அதற்குண்டான வட்டி மற்றும் பிற செலவுகள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

கிளை: ராயபுரம், கடன் கணக்கு எண். SERYPRM0230547, கடன்தாரர்கள்: 1. திரு.குமரன்.M த/பெ. மோகன், 2. திருமதி.நீலாவதி க/பெ. குமரன், கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை: 17-04-2025 & ரூ.9,22,739/- சுவாதீன தேதி: 30-06-2025

அசையா சொத்தின் விவரம்: வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் திருவொற்றியூர் துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தாலுக்கா, காந்தி தெரு, ஜெய்ஹிந்த் நகர், எர்ணாவூர் கிராமத்தில் வார்டு - C, பிளாக் எண்.2, சர்வே எண். 133/3B, டவுன் சர்வே. 99-என்படி மனை எண்.44-ல் உள்ள 445 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துணுக்குகளும் மற்றும் எல்லைகள் : வடக்கில் : திருமதி. கஜாநாதா அவர்களுக்கு சொந்தமான சொத்து, தெற்கில்: காந்தி தெரு, ஜெய்ஹிந்த் நகர், கிழக்கில்: 4 அடி வழி, மேற்கில்: மனை எண்.43.

தேதி : 02.07.2025
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர், எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

RELIANCE Asset Reconstruction
ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்.
11வது தளம், வடக்குப் பக்கம், R-டெக் பார்க், மேற்கு விரைவு நெடுஞ்சாலை, கோரேகாவ் (கிழக்கு) மும்பை-400063

சுவாதீன அறிவிப்பு [பார்க்கவும் விதி 8(1)] (அசையா சொத்துக்களுக்கானது)

இதன்படி, ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட் RARC 052 (IB ரீடெய்ல்) டிரஸ்ட், அறக்கட்டளையானது 18.11.2020 தேதிப்பட்ட பொறுப்பு ஒப்படைப்பு ஒப்பந்தத்தின் மூலம் இந்தியன் வங்கியிடமிருந்து நிதி சொத்துக்களை கைமாற்றுத்திறுவினது. 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின்கீழ், கீழே கையொப்பமிட்டுள்ளவர் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிட்., நிறுவனத்தின் அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-இன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், விதி 3-இன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியும் 06.09.2024 நாளிட்டப்பட்ட கோரிக்கை அறிவிப்பை(DEMAND NOTICE) 1) M/s ஸ்ரீ நாதன் கூபே (கடன்தாரர்) பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு. D. சதிஷ் குமார், எண் 140, ஜிஎல்டி சாலை, மதுராந்தகம், காஞ்சிபுரம் 603 306. 2) திரு. D. சதிஷ் குமார் (அடமானதாரர் மற்றும் உரிமையாளர்) த/பெ D. துளசிவேலு, எண். 10/5, சுந்தராம நகர், மருத்துவமனை சாலை, மதுராந்தகம் நகரம், காஞ்சிபுரம் 603 306. 3) திரு. D. துளசிவேலு (ஜாமீன்தாரர்) த/பெ திரு. G. துரைராஜ், எண். 10/5, சுந்தராம நகர், மருத்துவமனை சாலை, மதுராந்தகம் நகரம், காஞ்சிபுரம் 603 306, ஆகியோருக்கு அனுப்பி மேற்கொள்ள அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாள்களுக்குள் ரூ.31,65,172.35 (ரூபாய் முப்பத்தொரு லட்சத்து அறுபத்தைந்தாயிரத்து நூற்று எழுபத்திரண்டு மற்றும் முப்பத்தைந்து பைசா மட்டும்) என்ற அதில் காணும் மொத்தத் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார்.

ஆனால், கடன்தாரர்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் மற்றும் பரவலாக பொதுமக்களுக்கு, இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம், பிரிவு 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்கொள்ள விதிகளின் விதி 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை கீழே கையொப்பம் இட்டிருப்பவர் தமது சுவாதீனத்தில் (POSSESSION) ஜூன் 2025, 30 ஆம் நாளன்று எடுத்துக் கொண்டார்.

மேலும், முக்கியமாக கடன்தார்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்களுக்கும் பரவலாக பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யா